

JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 12 | இதழ்: 11 | ஜனவரி 2022 | ஆண்டு சந்தா ₹ 100/-

# பயப்படாதே!

உன்னை காத்துக் கொள்ளும்படியாக
நான் உன்னோடு கூடவே இருக்கிறேன்.

# Happy New Year 2022

கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமான வாலிபர்களே! 2021ஆம் ஆண்டில் அநேக பாடுகள், போராட்டங்கள் வந்தபோதிலும், கர்த்தர் திறந்த வாசலை கொடுத்து, தேவ பணியை வைராக்கியமாக செய்து, தேசத்தின் பல இடங்களுக்கு எழுப்புதல் அக்கினியை கொண்டு சென்ற வாலிபர்களாகிய உங்களுக்கும், வாலிபர் ஊழியத்தை பல வகைகளில் நேசித்து, ஆதரித்த தன்னார்வ நெஞ்சங்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஜெபக்குழு அங்கத்தினர்களுக்கும், வாலிபர் உலகம் சந்தாதாரர்களுக்கும் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் சார்பாக எங்களது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வருடத் திலும் ஆண்டவர் வாக்குக் கொடுக்கிறபடியே பயப்படாமல் எழுப்புதல் அக்கினியை தேசமெங்கும் கொண்டு செல்ல உங்களை உற்சாகப்படுத்துகிறேன், ஜெபிக்கிறேன்.

அன்புடன்
மோகன் சி. லாசரஸ்



06 இயேசுவின் அழைப்பு...
14 பயப்படாதே!
20 அக்கினியைப் பரவ செய்வோர் முகாம்
32 கிராம ஊழியம்!

வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats App மூலமாகவோ 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

தலைவாசல்

# பயப்படேன்

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!**

நம்முடைய வாழ்க்கையில் தேவன் நமக்கு எண்ணிக்கைக்கடங்கா வாக்குத்தத்தங்களை கொடுத்தாலும் ஏதோ ஒரு மூலையில் இருதயத்தின் ஓரத்தில் ஒருவிதமான பயம். அநேக நேரம் அந்த பயம் நம்மை செயல்படாமல் நிறுத்தும் என்று சொன்னால் மிகையாகாது. நம்மை சுற்றியும் தேவன் ஒரு அரணாகவும், கோட்டையாகவும் இருந்தாலும், நம்மையும் அறியாமல் ஒருவித பயம் நம்மை ஆண்டு கொண்டிருக்கும். இந்த பயத்தை போக்க நாம் செய்ய வேண்டிய ஒரு காரியம் என்னவென்றால், விசுவாசத்தை அதிகரிக்க வேண்டும். நம் விசுவாசம் அதிகரிக்க என்ன செய்ய வேண்டுமென்றால் வசனமாகிய ஆயுதத்தை நம் இருதயத்தில் வைக்க வேண்டும். நம்முடைய சிந்தையில் தோன்றும் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை அல்லது பதில் இல்லை என்றால் உடனே பயம் வருகிறது. எடுத்துக்காட்டாக, பள்ளியில் பீஸ் கட்ட வேண்டும் என்று மூலையில் இருந்து ஒரு எண்ணம் உதிக்க, உடனே பணம் இல்லையே என்ற பதில் உதிக்கிறது. பிறகு என்ன செய்வோம் என்ற கவலை எழுந்தவுடன் அதை மேற்கொள்ள முடியாததால் பயம் உருவாகிறது. அந்த பயத்தை சரியாக கையாளாவிட்டால் அது ஒரு படபடப்பை ஏற்படுத்தி நம்மை முடக்கி விடுகிறது.

இதைபோன்று தான் நம்முடைய ஒவ்வொரு பிரச்சனையும் (கடன், பாவம், நோய், வறுமை) அவற்றை நாம் சரியாக கையாளாவிட்டால் நமக்குள் பயத்தை கொண்டு வந்து நம்மை செயல்படவிடாமல் முடக்கிவிடுகிறது. ஆனால் இந்த பயத்தை போக்க வேத வசனத்தை விசுவாசித்து, அறிக்கை செய்வதுதான் ஒரே வழி. அந்த வேத வசனம் நம் இருதயத்தில் இருக்குமேயென்றால், சிந்தனையில் தோன்றும் எல்லா எண்ணத்தையும், இருதயத்தில் உள்ள வசனம் பதிலடி கொடுத்து மேற்கொண்டு ஜெயிக்கும்.

இந்த புதிய ஆண்டிலே

*பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்*

என்பதாக தேவன் வாக்குத்தத்தம் கொடுக்கிறார்.

இந்த வசனத்தை விசுவாசித்து, இருதய பலகையில் அச்சிட்டால், பயம் எழும்பும்போதெல்லாம் அந்த வசனம் நம்மை பாதுகாத்து, உயிர்ப்பித்து உருவாக்கிவிடும்.

வாலிபனே, 1 யோவான் 2:14 சொல்வதுபோல, தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினால், மட்டுமே நீங்கள் பொல்லாங்கனை ஜெயிக்க முடியும்.

**நீங்கள் ஜெயத்தோடு வாழ ஜெபமும், வேதவசனமும் மிக முக்கியம்●**

கிறிஸ்துவின் பணியில்

அவினாஷ்

*2008 & 2021*

# 'இயேசு விடுவிக்கிறார்' வாலிபர் ஊழியம்!

கடந்த 1978ஆம் ஆண்டு 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, 1979ஆம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி முதல் சிறுவர் முகாம் நடத்தப்பட்டது. 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ம் தேதி வாலிபர் முகாம் நடத்த தேவன் கிருபை செய்தார். அதைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டு வாலிபர் ஊழியத்திற்கென்று ஒரு குழு உருவாக்கப்பட்டு, வாலிபர்கள் மீது அதிகக் கவனம் செலுத்தி, வாலிபர்களைச் சந்திக்க வேண்டுமென்று ஆண்டவர் பாரபடுத்தியதின் நிமித்தம் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி வாலிபர் ஊழியம் எனத் தனிப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.













இன்று 'இயேசு விடுவிக்கிறார்' வாலிபர் ஊழியம் இந்தியாவின் பல மாநிலங்களில் சென்று ஊழியம் செய்து, லட்சக்கணக்கான வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், எழுப்புதலுக்காக ஆயத்தப்படுத்தவும் தேவன் கிருபை பாராட்டி வருகிறார். அதோடு மட்டுமல்லாமல் எல்லா தேசங்களிலிருந்தும் வாலிபர்களை நாலுமாவடிக்கு அழைத்து வந்து, எழுப்புதல் அக்கினியை பரவச் செய்கிறவர்களாக உருவாக்கி அனுப்ப வேண்டுமென்று கர்த்தர் கொடுத்த ஆலோசனையின்படி 2021ஆம் ஆண்டு **Igniters Camp** நடத்தப்பட்டு இந்தியா முழுவதுமிருந்து வாலிபர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அனுப்பியுள்ளோம்.





மாவட்டந்தோறும் வாலிபர் கொண்டாட்டம், **Achivers** [தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை], **Mount Sinai** [வாலிபர் உபவாசக் கூடுகை] மாதந்தோறும் வாலிபர் ஐக்கியம் என தமிழ்நாடு மட்டுமல்லாமல், ஆந்திரா, மஹாராஷ்டிரா மாநிலங்களிலும் நடைபெற்று வருகிறது.






வாலிபர் உலகம் என்ற மாதாந்திர பத்திரிக்கை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 15,000 அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது. 30,000க்கும் மேற்பட்ட வாலிபர்கள் வாசித்து பயனடைந்து வருகிறார்கள். வாலிபர் உலகம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் வாலிபர்களை கர்த்தருக்குள் வழிநடத்த தேவன் உதவி செய்து வருகிறார். 2021ஆம் ஆண்டு கர்த்தர் 'இயேசு விடுவிக்கிறார்' வாலிபர் ஊழியத்தின் மூலமாக செய்த ஊழியங்களைக் குறித்து அடுத்த பக்கங்களில் படியுங்கள்! தொடர்ந்து ஜெபியுங்கள்









சாட்சி: ஜிஷியா



ஜெனிபர்

# இயேசுவின் அழைப்பு...

*பூசாரி குடும்பத்தில் பிறந்த சகோதரி நந்தினி பிரியதர்ஷினியை சிறுவயதில் இரட்சித்து, வாலிப வயதில் பரிசுத்தத்தை காத்துக்கொண்டு, முதுகலைப் பட்டப்படிப்பை படித்து முடித்து, இன்றைக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கும் அன்பு சகோதரியின் வாழ்க்கை பயணத்தை உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள். வாங்க அவர்களோடு பேசலாம்!*

**உங்களது குடும்பம் மற்றும் சிறு பிராயம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் ஒரு பூசாரி குடும்பத்தில் பிறந்து, மிகவும் பக்தியாக வளர்க்கப் பட்டேன். என் குடும்பத்தார் தினமும் நிறைய ஸ்லோகங்களைக் கற்றுக் கொடுத்து அதை சொல்ல வைப்பார்கள். படிப்பாக இருந்தாலும், பள்ளியில் நடத்தப்படும் பிற போட்டிகளாக இருந்தாலும் பரிசுகளை வென்று விடுவேன். என் குடும்பத்திலேயே எனது தாயார் தெய்வத்தின் மீது மிகவும் பக்தியாக இருப்பார்கள். ஒவ்வொரு நாளும் விரதம் இருந்து கோவில்களுக்குச் செல்வதோடு, NUMERALOGYயும் பார்ப்பார்கள். இவ்வளவு பக்தியோடு தெய்வத்தை வணங்கின என் அம்மாவுக்கு சமாதானமோ, நிம்மதியோ இல்லை. அதனால் யார் உண்மையான கடவுள்? யாரால் மனநிம்மதியையும்,



ஜெனிபர் தனது தாயாருடன்

சமாதானத்தையும் தர முடியும் என்று தேட ஆரம்பித்தார். அந்தத் தேடுதலின் முடிவில் 2008ம் வருடம் இயேசு கிறிஸ்து அம்மாவை சந்தித்து தன்னை வெளிப்படுத்தினார். என் அம்மா இரட்சிக்கப்பட்டார்கள். இயேசுவும் ஒரு கடவுள் என்பது மட்டும் தான் எனக்கு தெரியும். நான் இரட்சிக்கப்படவில்லை.



**சரி... நீங்கள் சிறுவயதில் பக்தியாக இருந்தீர்கள்... படிப்பிலும் பிற போட்டிகளிலும் வெற்றி பெற்றீர்கள்... உங்கள் அம்மா இரட்சிக்கப்பட்டார்கள்... நீங்கள் எப்படி? எப்போது இரட்சிக்கப்பட்டீர்கள்?**

என் அம்மா இரட்சிக்கப்பட்டதும் என்னுடைய இரட்சிப்பிற்காக ஒவ்வொரு நாளும் ஜெபிப்பார்கள். எனக்கோ யார் மெய்யான கடவுள் என்று ஒரே குழப்பமாக இருந்தது. அதனால் ஒரு பக்கம் ஸ்லோகங்கள் சொல்லிக்கொண்டு, மறுபக்கம் அல்லேலூயா சொல்லிக் கொள்ளலாம் என பெயருக்கு இயேசுவை வணங்க ஆரம்பித்தேன். எங்கள் வீட்டில் நாங்கள் இரவு படுக்கைக்கு செல்லும் முன்பு தெய்வ வணக்கம் செய்வது வழக்கம். 5ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் இரவு இயேசு விடம், எனக்கு எப்படி ஜெபிப்பது என்று தெரியாது, ஸ்லோகங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள், எனவே அதைச் சொல்லி ஜெபிக்கிறேன்

நீர் ஏற்றுக்கொள்ளுமென்று ஜெபித்துவிட்டு தூங்க சென்றேன். அன்று இரவு முதல்முறை இயேசு என் கனவில் வந்து, ''நீ நல்ல பிள்ளையாக இருந்து, உன் அம்மாவிற்கு கீழ்ப்படிய வேண்டும்'' என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். குழப்பத்தில் இருந்த எனக்கு இயேசு தான் மெய்யான கடவுள் என்று வெளிப்படுத்தினார். அதுமட்டுமல்லாமல் நான் எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று இயேசு சொல்லுகிறாரே என்று மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதன்பிறகு சபைகளிலும், ஜெபக் கூடுகைகளிலும் கலந்து கொண்டு இயேசுவைப் பற்றி இன்னும் அதிகமாக தெரிந்து கொண்டு எனது 10வது வயதில் (5ம் வகுப்பு) இரட்சிக்கப்பட்டேன். நான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக எனக்கும், நான் வணங்கி கொண்டிருந்த தெய்வங்களுக்கும் எந்தவிதமான தனிப்பட்ட உறவும் கிடையாது. கடவுள் ஒரு பயபக்திக்குரியவர் என்று சொல்லிக் கொடுத்து வளர்த்தார்கள். ஆனால் நான் இரட்சிக்கப்பட்ட பின்பு இயேசுவுடன் இவ்வளவு நெருக்கமாக பழக முடியுமா? என்று நான் ஆச்சரியப்பட்டேன்.


ஜெனிபர் சிறு வயதில்

**சூப்பர்... 10 வயதில் இரட்சிக்கப்பட்டீர்கள்... உங்களுக்கும் இயேசுவுக்கும் உள்ள உறவு எப்படி இருந்தது?**

எனக்கு சிறுவயதிலிருந்தே அப்பா கிடையாது. ஆகவே என் மனதின் ஓரத்தில் ஒரு கவலை இருந்து கொண்டேயிருந்தது. ஒவ்வொரு நாளும் பள்ளி முடிந்து வீட்டிற்கு செல்வதற்கு நான் காத்திருக்கும் போது, என் நண்பர்களை அவர்களின் அப்பா வந்து அழைத்துச் செல்வார்கள். என்னை அம்மா அழைத்து செல்ல வருவார்கள். அதைப் பார்த்து நான் அழுதிருக்கிறேன். ஒருநாள் அழுது கொண்டிருக்கும்போது, மற்றவர்களுக்கெல்லாம் உலகப்பிரகாரமான அப்பா தான் இருக்கிறார்கள், அவர்களால் எல்லா இடத்திற்கும் தன் பிள்ளைகளோடுகூட வர முடியாது, ஆனால் இந்த உலகத்தையே படைத்தவர் உனக்கு அப்பாவாக இருக்கிறார், அவர் உன்னோடுகூட எல்லா இடங்களுக்கும் வரமுடியும், எல்லா பிள்ளைகளையும் விட நீ பாக்கியசாலி, அதை நினைத்து சந்தோஷப்படு, நீ கவலைப்பட்டால் இயேசப்பா துக்கப்படுவார் என்று ஒரு நாள் என் தாயார் சொன்னார்கள். உடனே நான் என் தவறை உணர்ந்து இயேசுவிடம் மன்னிப்பு கேட்டேன். அன்றிலிருந்து நான் இயேசுவை என் அப்பாவாக சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டேன். என் மனதிலிருந்த கவலை மறந்து, இந்த உலகத்தையே படைத்த ஆண்டவர் எனக்கு அப்பாவாக இருக்கிறார் என்ற பெருமிதம் எனக்குள் வந்தது. அன்றிலிருந்து இன்று வரை இயேசு என் அப்பாவாக இருந்து என்னுடைய எல்லாக் காரியங்களையும் பொறுப்பெடுத்து நடத்தி வருகிறார்.

**இயேசுவை அப்பாவாக ஏற்றுக் கொண்டீர்கள்... உங்களுடைய சிறுவயது இரட்சிப்பின் அனுபவம் எப்படி இருந்தது?**

சொல்றேன்... நான் படித்த பள்ளியில் பஜனை பாடல்கள், நடனங்களை ஆடி பரிசுகளை வாங்குவேன். இரட்சிக்கப்பட்டதும் அப்பாடல்களை பாடுவதை நிறுத்தி விட்டேன். எனது பள்ளி தலைமை ஆசிரியை நீ ஏன் இப்போது பஜனை பாடுவதில்லை? என கேட்டார். உடனே நான் இரட்சிக்கப்பட்டதையும், இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல், அவரது இரண்டாம் வருகையைப் பற்றியும் கூறினேன். என்னைச் சுற்றி நிறைய ஆசிரியர்கள் நின்றுக் கொண்டிருந்தனர். நான் கூறியதைக் கேட்ட தலைமை ஆசிரியை நீ அதிகமாய் பேசுகிறாய் என கூறி என்னை அனுப்பி விட்டனர். நான் இரட்சிக்கப்பட்டதும் செய்த முதல் பிரசங்கம் அதுதான். நான் எல்லோரிடமும் பேசுவதற்கு கூச்சப்படுவேன். ஆனால், ஆண்டவர் என்னை 10 வயதிலேயே சுவிசேஷம் சொல்ல பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்.

**சூப்பர்... 10 வயதிலேயே சுவிசேஷம் சொல்ல ஆரம்பித்தீர்கள்... ஆவிக்குரிய வாழ்வில் எப்படி பெலனடைந்தீர்கள்?**

நாங்கள் குடும்பமாய் இரட்சிக்கப்பட்டு ஆண்டவருக்குள் வளருகின்ற வேளையில் ஆண்டவருக்குள் எங்களை வழிநடத்த தேவன் ஒரு நல்ல அக்காவை கொடுத்தார். நாங்கள் சில குடும்பங்களாய் இணைந்து ஜெபக் குழு உருவாக்கி ஜெபிக்க ஆரம்பித்தோம். அந்த ஜெபக்குழு தான் என்னுடைய அடித்தளம். சிறுவயதிலிருந்தே கர்த்தருக்காய் வைராக்கியமாய் வாழ, ஊழியம் செய்ய, கிறிஸ்தவ ஒழுங்குடன் வாழ





நான் அதில் போதிக்கப்பட்டேன். அதுமட்டுமல்லாமல், ஆலயத்தில் நடைபெறும் ஞாயிறு பாடசாலைக்கு ஒழுங்காக செல்வேன். அங்கு தானியேலைப் பற்றி அறிந்து கொண்டு, நானும் தானியேலைப் போல ஆண்டவருக்கென்று வைராக்கியமாய் நிற்க வேண்டுமென்ற ஆசை எழவே அதற்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். அதுமட்டுமல்லாமல் சினெர்ஜியா வாலிபர் கூடுகைக்கு மாதந்தோறும் சென்று கர்த்தருக்குள் பெலப்பட கர்த்தர் உதவி செய்தார்.

**சரி...தானியேலைப் போல வைராக்கியமாக வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டீர்கள்... அதை உங்களால் நிறைவேற்ற முடிந்ததா?**

ஆம்... நான் 11ம் வகுப்பு படிக்கும் போது பள்ளியில் ஒரு இந்து பண்டிகைக்கு ஒரு கடவுளின் படத்தைக் கொடுத்து அதற்கு Colour பண்ண சொல்லி எங்களிடம் கொடுத்தார்கள். அதை நாங்கள் Colour செய்து கொடுத்தால், அந்தத் தாளை அந்தக் கடவுளின் பாதத்தில் வைத்து பிரார்த்தனை செய்து ஒரு டாலரையும், பிரசாதத்தையும் எங்களுக்கு கொடுப்பார்கள் என்றார்கள். எனக்கோ இதில் உடன்பாடு இல்லை. தானியேலைப் போல இருக்க வேண்டும் என நான் ஜெபித்து வந்ததால், என்னால் இதை Colour செய்து தர முடியாது என்று என் ஆசிரியையிடம் சொன்னேன். என்னைப் பார்த்து என்னோடு பயிலும் இன்னொரு கிறிஸ்தவப் பெண்ணும் எழுந்து நின்றாள். இதைப் பார்த்து ஆசிரியர் கோபத்தினால் எல்றோர் முன்பதாகவும் பயங்கரமாகத் திட்டினார்கள். அவமானப்படும்படியான சூழ்நிலைகள் உண்டானது. சிறிது நாட்களுக்குப் பிறகு Inter School Competition ஒன்று வந்தது. எனக்கு வயலின் வாசிக்கத் தெரியும் என்பதால் அந்தப் போட்டியில் என் பெயரை கொடுத்தேன். ஆண்டவர் எனக்கு துணை நின்று மாவட்ட அளவில் முதல் பரிசு கிடைக்கச் செய்தார். என்னை மாநில அளவிற்கான போட்டிகளிலும் பங்கு பெறச் செய்தார். இதைக்கண்ட என் ஆசிரியர்கள் நீ எந்த சினிமா பாடலுக்கு வாசித்தாய் என கேட்க, நான் இயேசுவின் பாடலுக்கு வயலின் வாசித்தேன். அதனால் தான் இந்த உயர்வு கிடைத்தது என்று சொன்னேன். நான் எந்த இடத்தில் அவமானப் பட்டேனோ அந்த இடத்தில் ஆண்டவர் என் தலையை உயர்த்தி அவரது நாமத்தை மகிமைப்படுத்தினார்.



வயலின் வாசிக்கும்போது

**ஓகே... இளம் வயதில் தானியேல் போல வைராக்கியமாய் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு அதன்படி நடந்தீர்கள்..ஆனால் கல்லூரி வாழ்க்கையில் உங்களால் பரிசுத்தமாக வாழ முடிந்ததா?**

கல்லூரி வாழ்க்கையிலும் நான் பரிசுத்தமாய் வாழ ஆண்டவர் எனக்கு உதவி செய்தார். கல்லூரி வாழ்க்கை வித்தியாசமானது தான். ஆனால் என்னிடம் ஒரு நடிகரைப் பற்றியோ, ஒரு படத்தை பற்றியோ என் நண்பர்கள் கேட்டால் எனக்கு இது தெரியாது நான் படம் பார்க்க மாட்டேன் என்று சொல்வேன். அப்போது ஏன் படம் பார்க்க கூடாது என்று உங்கள் பைபிளில் இருக்கிறதா? என்று கேட்பார்கள். ஆனால் உன்னை கறைபடுத்தும் காரியத்திற்கு இடம் கொடுக்காதே என்று வேதத்தில் கூறியிருக்கிறது என்று சொல்லுவேன். என் நடக்கையைப் பார்த்த அவர்கள் என்னை இயேசு என்றே அழைக்க ஆரம்பித்து விட்டனர். இதற்கிடையில் நான் நாலுமாவடியில் நடந்த சேனை முகாமில் பங்கு பெற்றேன். அங்கு ஊழியம்

செய்வது எப்படி என்று கற்றுக் கொடுத்தார்கள். அது மிகவும் பிரயோஜனமாக இருந்தது. அதன் பின்பு என்னுடைய கல்லூரியில் நான் ஆண்டவர் பற்றிக் கூற ஆரம்பித்தேன். என்னோடு கல்லூரி பேருந்தில் பயணிப்பவர்கள் 'Earphone' போட்டு பாடல்களைக் கேட்பார்கள். அப்போது நானும் Earphone போட்டு கிறிஸ்தவ பாடல் கேட்கலாம் என நினைத்தபோது, 'நீ மற்றவர்களைப் போல பாட்டுக் கேட்டால், சினிமா பாடல் கேட்கிறாய் என்று நினைப்பார்கள், அதனால் நீ வேதத்தை எடுத்து வாசி என்று கர்த்தர் என்னோடு பேசினார். அதிலிருந்து நான் கல்லூரி பேருந்தில் பயணிக்கும் போது வேதம் வாசிக்க ஆரம்பித் தேன். அதைப் பார்த்து என்னோடு பயணிக்கும் மாணவர்கள், Professors இயேசுவைப் பற்றி என்னிடம் கேட்பார்கள். அவர்களுக்கு சுவிஷேசம் சொல்லும் வாய்ப்பு கிடைத்தது. ஆண்டவருடைய கிருபையினால் 88% மதிப்பெண்களுடன் B.sc. BIOTECH இளங்கலை பட்டப்படிப்பை முடித்தேன். கல்லூரியில் வாலிபர்களுக்கே உண்டான எந்த ஒரு பாவத்திலும் விழுந்து விடாதபடி தேவனே என்னை பாதுகாத்தார்.

**இளங்கலை படிப்பை பரிசுத்தமாக படித்து முடித்தீர்கள்... தொடர்ந்து முதுகலை பட்டப் படிப்பை படித்தீர்களா? எப்படி படித்தீர்கள்?**

இளங்கலை பட்டப்படிப்பு முடிந்ததும் முதுகலைப் பட்டப்படிப்பும் படிக்க வேண்டும் என்ற ஆசை எனக்குள் இருந்தது. ஆனால் எங்களிடமோ அதற்கான பண வசதி இல்லை. என் தாயார் டெய்லரிங் கடை வைத்து அதில் வரும் கொஞ்ச வருமானத்தில் தான் எங்கள் குடும்பத்தை நடத்திக் கொண்டிருந்தோம். நான் ஆண்டவரிடம் நீர் தானே என் அப்பா, நீர் என் படிப்பின் தேவைகளைச் சந்திக்க வேண்டும் என ஜெபித்துக் கொண்டிருந்தேன். என் uncle ஒருவர் எனது படிப்பின் காரியத்தை தனது நண்பர் ஒருவரிடம் சொல்லி, அவர்கள் ஒரு கவரைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்கள். நான் ஜெபித்து விட்டு, அந்தக் கவரை பிரித்தபோது 75,000/-ரூபாய் இருந்தது. எனக்கு ஒரு செமஸ்டருக்கு 25,000/ ரூபாய் தேவைப்பட்டது. ஆனால் மூன்று செமஸ்டருக்கு தேவையான பணம் அதில் இருந்தது. கண்ணீரோடு நான்





சேனை முகாமில் கலந்து கொண்ட போது

ஆண்டவருக்கு நன்றி கூறினேன். எங்கள் கடைக்கு பக்கத்தில் ஐஸ்கிரீம் கடை வைத்திருக்கும் அக்காவிடம் உனது படிப்பிற்கான தேவை சந்திக்கப்பட்டதை சாட்சியாகப் பகிர்ந்துகொள் என்று கர்த்தர் சொன்னார். நானும் அந்த அக்காவிடம் எனக்கு செமஸ்டருக்கு தேவையான பணம் 75,000/- ரூபாய் கிடைத்ததை சாட்சியாக சொன்ன போது, ஆச்சரியமாய் எங்களைப் பார்த்து, உங்கள் கடவுள் தான் மெய்யான கடவுள் என்று சொன்னார்கள். உங்களுடைய பிள்ளைகளின் தேவைகளையே உங்களால் சந்திக்க முடியவில்லையென்றால், எப்படி எனக்கு குழந்தை கொடுப்பீர்கள்? அவர்கள் எந்தநேரமும் ஜெபம், ஊழியமென்று இருக்கிறார்கள், அவர்களுக்கு அற்புதம் செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் தான் உண்மையான தெய்வமென்று நம்புவேன் என உங்கள் இயேசுவிடம் சவால் விட்டிருந்தேன். ஆனால், இப்பொழுது உங்கள் இயேசு மெய்யான கடவுள் என்று தன்னை நிரூபித்துவிட்டார் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் எங்களுக்கு மிகுந்த ஆச்சரியம். எனக்கு திருச்சியில் உள்ள ஒரு கல்லூரியில் M.Sc. BIOTECH முதுகலை பட்டப் படிப்பை படித்து முடிக்க தேவன் கிருபை செய்தார்.

**சூப்பர்... முதுகலைப் பட்டப்படிப்பை முடித்தீர்கள்... திருச்சியில் ஊழியம் செய்யும் வாய்ப்பு கிடைத்ததா?**

ஆம்... திருச்சியில் என்னால் ஊழியம் செய்ய முடியுமா என்ற கேள்வியோடு இருந்தபோது, ஹாஸ்டலில் தங்கியிருக்கும் பிள்ளைகளாக கூடி ஜெபிக்க வாய்ப்பு கிடைத்தது. திருச்சியில் நடக்கும் Igniters மாதாந்திரக் கூடுகைக்கு என்னுடன் வருவார்கள். Trichy Ignitersயுடன் சேர்ந்து அநேக ஊழியங்களை செய்ய ஆண்டவர் கிருபை கொடுத்தார். Trichy

Igniters அனைவரும் சேர்ந்து இன்று வரை Conference call மூலமாக தேசத்திற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். தேசத்திற்காக ஜெபிக்கும் எங்களது வாழ்வில் தேவன் அநேக நன்மைகளை செய்து வருகிறார்.

**ஒகே... கல்லூரியில் ஊழியம் செய்தீர்கள்... தற்போது என்னென்ன ஊழியங்களை செய்து வருகிறீர்கள்?**

ஊரடங்கு காலங்களில் தேசத்திற்காய் சிறு பிள்ளைகளோடு இணைந்து ஜெபிக்க தேவன் கொடுத்த ஆலோசனையின்படி எங்கள் ஜெபக்குழுவிலுள்ள 5 பிள்ளைகளாக இணைந்து ஜெபித்தோம். தற்போது 130 பிள்ளைகளுக்கு மேல் தினமும் காலை மாலை என ஜெபித்து வருகிறோம். அதுமட்டு மல்லாமல் சபை வாலிபர்களாய் இணைந்து காலை 5:30 மணிக்கு சபையின் எழுப்புதலுக்காக ஜெபித்து வருகிறோம். ஞாயிற்றுக் கிழமைகளில் திருப்பூர் கிராமங்களிலுள்ள ஆலயங்களுக்கு சென்று தேவ செய்தி வழங்கவும், ஆராதனை நடத்தவும், சிறுவர்கள், வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்யவும் தேவன் என்னை பயன்படுத்தி வருகிறார். எங்களது கடையில் டியூசன் சென்டர் நடத்த சொல்லி ஆண்டவர் கொடுத்த ஆலோசனையின்படி டியூசன் எடுக்க ஆரம்பித்தேன். ஆண்டவரை அறியாத அநேக சிறுபிள்ளைகள் ஜெபித்து வருகிறார்கள்.

**சரி... பட்டப்படிப்பு முடித்தீர்கள்.. ஊழியம் செய்கிறீர்கள்.. சிறுவயதிலேயே தகப்பனை இழந்த உங்களை, உங்கள் தாயார் தனி ஆளாக நின்று படித்து ஆளாக்கியிருக்கிறார்கள்.. அவர்களைப் பற்றி சொல்லுங்களேன்?**



என்னுடைய ஊழியக் காரியங்களிலும், படிப்பின் காரியங்களிலும் எனக்கு முழு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். நான் சோர்ந்து போகும் போதெல்லாம் ஆண்டவருடைய வார்த்தைகளைச் சொல்லி என்னை உற்சாகப்படுத்துவார்கள். ஒரு பெண், ஆண் துணையில்லாமல் ஒரு குழந்தையை இந்த உலகத்தில் வளர்ப்பது கடினமான காரியம் தான். அவர்களின் வாழ்க்கையின் பாதையில் எத்தனையோ பிரச்சனைகளையும், போராட்டங்களையும் சந்தித்து இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் என் கண்களுக்கு முன்பாக பார்த்திருக்கிறேன். ஆனாலும், அவை எல்லாவற்றையும் ஆண்டவரின் உறுதுணையோடும், அவரது பெலத்தினாலும் கடந்து வந்தார்கள். என் வளர்ச்சிக்கு பின்பாக தேவனுடைய கிருபையும், என் தாயாரது முழங்கால்களும், அவரது தியாகங்களும் இருக்கின்றன. என் தாயாருக்காக தேவனை துதிக்கிறேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

ஆண்டவரைப் பற்றி துளியும் அறியாமல் எங்கேயோ, எப்படியோ இருந்த என்னை ஆண்டவர் அவரது நாமத்தை அறிய செய்து, அவருடைய நாம மகிமைக்காக இவ்வளவாய் பயன்படுத்தி வருகிறார். நம் ஒவ்வொருவரை குறித்தும் தேவனுக்கு ஒரு நோக்கம் உண்டு. அதற்காய் தேவன் நம்மை அழைக்கும் போது எவ்வித தயக்கமுமின்றி நம்மை ஒப்புக் கொடுப்போம். உலகத்தால் கறைபடாதபடி பரிசுத்தமாய் வாழ ஆண்டவரின் உதவியை நாம் நாடும்பொழுது நம்மை பரிசுத்தமாய் மாத்திரம் அல்ல, அநேகருக்கு ஆசீர்வாதமாய் மாற்றுவார்.

**அன்பான வாலிபர்களே! பூசாரி குடும்பத்தில் பிறந்த நந்தினி பிரியதர்ஷினி 5ம் வகுப்பு படிக்கும்போதே இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று, தாயாரின் ஜெபத்தினாலும் கடின உழைப்பினாலும் முதுகலைப் பட்டப்படிப்பை முடித்து, ஆண்டவருக்காக ஊழியம் செய்து வரும் சகோதரி ஜெனிபரின் வாழ்க்கையில் ஆண்டவர் எவ்வளவாய் உயர்த்தி வைத்திருக்கிறார். இன்றைக்கு நீங்களும் இப்படிப்பட்டதான சூழ்நிலையில் இருப்பீர்களானால் உங்களை முற்றிலும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். உங்களையும் ஆண்டவர் உயர்வான இடத்தில் வைப்பார்! ●**

# இயேசு விடுவிக்கிறார்

## வாலிபர் ஊழியம் தொலைக்காட்சி!

இயேசுவை அறியாத வாலிபர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் விதமாக 2000ஆம் ஆண்டு முதல் வாலிபர் உலகம் தொலைக்காட்சி நிகழ்ச்சி வாரந்தோறும் சனிக்கிழமை காலை 6:30 மணிக்கு சத்தியம் டி.வியில் ஒளிபரப்ப தேவன் கிருபை செய்து வருகிறார். ஊரடங்கு நாட்களிலும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் அநேகர் இந்நிகழ்ச்சியைப் பார்த்து பயன் பெற்று வருகிறார்கள். இந்த வருடம் புதிய பொலிவுடன் அநேக புதுப்புது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.

### ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நிகழ்ச்சி

**உண்மையை தெரிஞ்சிக்கோ...**
(வாலிபர்களின் கேள்விகளுக்கான பதில்கள்)

**உயிருள்ள சாட்சி**
(வாலிபர்களின் வாழ்க்கையில் நடந்த அற்புத சாட்சிகள்)















இன்னும் பல...

# Revival IGNITERS

**EVERY 1ST SUNDAY**
(2nd January)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center,
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsamane Prayer Center,
9442885315

**EVERY 2ND SATURDAY**
(8th January)

MADURAI (4:30 - 6:30PM)
Gethsamane Prayer Centre
9750955548 | 0452-2677300

**EVERY 2ND SUNDAY**
(9th January)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School,
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsamane Prayer Centre,
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Gethsamane Prayer Centre,
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 6 PM)**
St. Paul's Matriculation School,
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building
9965377427 | 9750955548

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center,
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School,
Surandai.
9443962141 | 9750955548

**EVERY 3RD SUNDAY**
(16th January)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
9488475315

**JEBAMALAI (2PM)**
Keelamathapuram,
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre,
9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI : (3-:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School,
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound,
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
9500283179 | 9442885315

**EVERY 4TH SATURDAY**
(22nd January)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
9788788512


**EVERY 4TH SUNDAY**
(23rd January)

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower,
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9750722000




# வாலிபர் உலகம்




'இயேசு விடுவிக்கிறார்' வாலிபர் ஊழியத்தின் மூலமாக 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வாலிபர் உலகம் என்ற வாலிபர்களுக்கான மாதாந்திர பத்திரிக்கை வெளியிட தேவன் கிருபை செய்து வருகிறார். கர்த்தரின் பெரிதான கிருபையால், 12 வருடங்கள் முடித்து 13வது வருடத்திற்குள் நடத்தி செல்கிறார். கிட்டத்தட்ட 15,000 பத்திரிக்கைகள் அச்சிடப்பட்டு, 10,500 சந்தாதாரர்களுக்கு அனுப்பட்டு வருகிறது. 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் Youth Life என்கிற ஆங்கில பத்திரிக்கை துவங்க தேவன் உதவி செய்தார். 7 வருடங்கள் முடித்து 8 வருடத்திற்குள் நடத்தி வந்த தேவனுக்கே மகிமை! 2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ஹிந்தி மொழியில் வெளியிட்டு வெப்சைட் மூலமாக ஹிந்தி பேசும் மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

## சாட்சிகள்:

நான் என்னுடைய மேற்படிப்பை குறித்து குழப்பத்தில் இருந்தேன். Heart beat மூலம் தேவன் எனக்கு தெளிவான ஆலோசனை கொடுத்தார்.

Youth World magazine is my favourite forever. I like every portion including picture and printing is very nice.

வாலிபர் உலகம் பத்திரிகை எப்போது வரும் என்று காத்திருந்து படிப்பேன். என்ன கேள்வியோடு இருக்கிறேனோ அந்த கேள்விக்கான விடை அந்த மாதத்தில் கிடைத்து விடும் – சுபி










# பயப்படாதே!

செய்தி: மோகன் சி. லாசரஸ்



**தேவனாகிய** கர்த்தர் 2022ஆம் ஆண்டில் உங்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தம், **''நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்''** ஏசாயா 41:10. இந்த ஆண்டில் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில், உங்கள் குடும்ப வாழ்க்கையில், உங்கள் சமுதாய வாழ்க்கையில் பயத்தைக் கொண்டு வருகிற காரியங்கள் வரலாம்! ஆனாலும் பயப்படாதீர்கள்! உங்களுக்கு பயத்தைக் கொண்டு வருகிற காரியத்திலிருந்து ஜெயம் கொடுப்பதற்காகவே வருடத்தின் 365 நாட்களும் அவர் உங்களோடு இருக்கிறார்! ஆகவே, பயப்படாதீர்கள்!

ஒரு இரவு நேரம், ஒரு மலைப் பாதையின் கடைசி பேருந்து போய்கொண்டிருந்தது. இரவு வெகு நேரமானபடியினால் கொஞ்ச ஆட்கள்தான் இருந்தார்கள். வளைந்து நெளிந்து அந்த மலைப் பாதையில் அந்தப் பேருந்து சென்று கொண்டிருந்தது. கொஞ்சம் தவறினாலும், பயங்கரமான பள்ளத்திற்குள் உருண்டு விழுந்து விட வேண்டியதுதான்! அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த அத்தனை பேரும், மிகுந்த பயத்தோடு அமர்ந்திருந்தார்கள். ஆனால் ஒரு சிறு பெண் மட்டும் எந்தவிதமான பயமும் இல்லாமல் சந்தோஷமாக பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள். அதைக் கவனித்த ஒரு பெரியவர் அந்த சிறுமியைப் பார்த்து, ''பாப்பா, உனக்கு பயமாகவே இல்லையா?'' என்று கேட்டார். உடனே அவள், எனக்கு பயமே இல்லை! ஏனென்றால், இந்தப் பேருந்தை ஓட்டுகிறவரே என் அப்பாதானே! அவர் பத்திரமாகக் கொண்டு போய் சேர்ப்பார் என்று எனக்குத் தெரியும்! என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். இதுதான் ஒரு பிள்ளை தன் தகப்பன் மீது வைக்கிற விசுவாசம்! இப்படித்தான் நாமும் நம்முடைய பரம தகப்பனாகிய கர்த்தர் மீது விசுவாசம் வைக்க வேண்டும். ''என் மீட்பர் இயேசு கிறிஸ்து என்னோடு கூட இருக்கிறார்! ஆகவே, நான் பயப்பட மாட்டேன்!'' என்று தைரியமாகச் சொல்லுங்கள். நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்! என்று வாக்குக் கொடுக்கிற கர்த்தராகிய தேவன் வாக்கு மாறாதவர்! அவர், தாம் வாக்குக் கொடுத்தபடியே ஒவ்வொரு நாளும் உங்களோடு இருப்பார்!





**எதற்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களோடு இருக்கிறார்?** என்பதை நாம் அறிந்து கொண்டால், தினமும் அற்புதங்களைக் காணலாம்!

## இரட்சிக்கும்படிக்கு...

''...உன்னை **இரட்சிக்கும்படிக்கு** நான் உன்னுடனே இருக்கிறேன்'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 1:19). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறவர்! பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை நமக்கு அருள்வதற்காகவே, அவர் ஒரு இரட்சகராக இந்த உலகத்தில் வந்தார்!

என்னுடைய 14வது வயதில் நான் வியாதிப்பட்டு, மரணப் படுக்கையில் இருந்தபோது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னைத் தேடி வந்து சுகமாக்கி, என் மரணப் படுக்கையை மாற்றினார்! அப்போது, ''இயேசு கிறிஸ்து என் மீது எவ்வளவு அன்பு வைத்து என்னை குணமாக்கினார்!'' என்று எண்ணி, மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால், அவர் என்னை சுகமாக்கியது, என்னை பாவத்திலிருந்து இரட்சிப்பதற்காகத்தான், என்பதை மூன்று வருடங்கள் கழித்துத்தான் நான் அறிந்து கொண்டேன். என் பாவங்களை அவர் எனக்கு உணர்த்தியபோது, அவைகளை அறிக்கையிட்டு, கண்ணீரோடு நான் மனந்திரும்பினேன். பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை அவர் எனக்குத் தந்தார்! பாவத்திலிருந்து விடுதலை கொடுத்து, எனக்கொரு புதிய வாழ்க்கையைத் தந்தார்!



எனக்கு அன்பானவர்களே, இதுவரையிலும் நீங்கள் பாவ மன்னிப்பை, அல்லது இரட்சிப்பைப் பெறாமல் இருப்பீர்களானால், இன்றைக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களை இரட்சிக்க விரும்புகிறார். இதுவரை உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற பாவ காரியங்கள், பாவ சுபாவங்கள் எதுவாக இருந்தாலும், அதிலிருந்து அவர் உங்களுக்கு விடுதலை கொடுக்க விரும்புகிறார். நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே, உங்களைக் குறித்து தேவனாகிய கர்த்தருடைய ஒரு உன்னதமான நோக்கமாக இருக்கிறது. ''இனிமேல் இந்த பாவ காரியம், இந்த பாவப் பழக்கம் வேண்டாம், இந்த நாளிலிருந்து ஒரு புதிய வாழ்க்கை வேண்டும்'' என்று நீங்கள் தீர்மானித்து, மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் ஏற்றுக் கொண்டால், இரட்சிப்பின் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்வீர்கள். நீங்கள் இரட்சிக்கப்படும்போது, உங்கள் முழுக் குடும்பமும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்குள் வந்து விடுகிறது! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களோடு கூட இருந்து, உங்கள் முழுக் குடும்பத்தையும் இரட்சிப்பார்!



''...கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக் கப்படுவீர்கள்...'' (அப். 16:31) என்பது தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம். விசுவாசத்தோடு இந்த வாக்குத்தத்தத்தை வைத்து ஜெபிப்பீர்களானால், உங்கள் குடும்பத்திலுள்ள எல்லோரும் இரட்சிப்பின் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்வார்கள்.

## தப்புவிக்கும்படிக்கு...

''உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், **உன்னைத்தப்புவிப்பதற்காகவும்**, நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' எரேமியா 15:20.

இந்த உலகத்தில், அனேக பொல்லாத ஜனங்களுக்கு நடுவில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பொறாமை கொண்ட அனேக மக்கள் தான் நம்மை சூழ்ந்திருக்கிறார்கள். நாம் வசிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில், படிக்கிற இடத்தில், நம்முடைய உயர்வை சகித்துக் கொள்ள முடியாமல், நமக்கு தீங்கு செய்ய நினைக்கிற மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். என்றாலும், எந்த விதமான தீங்குக்கும் நம்மை தப்புவிக்கிற தேவனாகிய கர்த்தர் நமக்கு இருக்கிறார்! ஆகவே, பயப்படாதீர்கள்!

தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, உண்மையோடும், நேர்மையோடும் நடந்த 'தானியேல்' என்கிற பக்தன் பாபிலோன் (இன்றைய ஈராக்) தேசத்தில் உயர்ந்த பதவியில் இருந்தார். அந்த தேசத்தின் இராஜா அவருக்கு உயர்ந்த ஒரு பதவியைக் கொடுத்திருந்தார். அப்போது தானியேலை சூழ இருந்தவர்கள் அவர் மீது பொறாமை கொண்டார்கள். வேறு தேசத்திலிருந்து நம்முடைய தேசத்திற்கு ஒரு அடிமையாக வந்த இவன், நமக்கும் மேலாக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறானே! இவனை எப்படியாவது அழித்து விட வேண்டும்! என்று திட்டமிட்டார்கள். அவர்கள் தந்திரமாக தானியேலுக்கு விரோதமான ஒரு சட்டத்தைக் கொண்டு வரச் செய்து, அவரை சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். **ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான். ராஜா கெபியின் கிட்டவந்தபோது, துயரசத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான்** (தானியேல் 6:16,20). ஒரு புற ஜாதி இராஜா கூட தானியேலின் தேவனை விசுவாசித்தான்! ஆனால், தானியேலின் காரியம் இதோடு முடிந்தது! அவனை சிங்கங்கள் கொன்று போட்டிருக்கும் என்று அவருடைய விரோதிகள் எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால், தேவனாகிய கர்த்தர் தானியேலோடு இருந்தபடியினால், தம்முடைய தூதனை அனுப்பி, சிங்கங்களின் வாயைக் கட்டிப் போட்டு, தானியேலை அந்த சிங்கக் கெபியிலிருந்து தப்புவித்தார்! (தானியேல் 6:15-28). தானியேலை தப்புவித்த தேவனாகிய கர்த்தர், உங்களையும் தப்புவிப்பார்! உங்கள் மீது பொறாமை கொண்ட பொல்லாத மனிதர்களால் வருகிற நெருக்கமானாலும், கெர்ச்சிக்கிற சிங்கம்போல எழும்புகிற பிசாசின் போராட்டமானாலும், பயப்படாதீர்கள்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எல்லா இக்கட்டிலுமிருந்து உங்களைத் தப்புவிப்பார்!





வெளி நாடு ஒன்றில், ஒரு தேவ ஊழியக்காரர் ஒரு மனிதனை சந்தித்தார். அந்த மனிதர் தன் சட்டையில் மீன் உருவத்தை Badgeஆக அணிந்திருந்தார். அந்த தேவ ஊழியர் அவரிடத்தில், ''இதை அழகுக்காகவா? அல்லது, இதில் வேறு எதாவது விசேஷம் இருக்கிறது என்று அணிந்திருக்கிறீர்களா? என்று விசாரித்தார். அப்பொழுது அவர், தான் ஒரு கப்பல் மாலுமியாக பணி செய்வதாக தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை சொன்னார்:

ஒரு சமயம், அவர் மாலுமியாக வேலை செய்து கொண்டிருந்த கப்பல், நடுக் கடலில் சென்று கொண்டிருந்த போது, அந்தக் கப்பலின் அடித்தளத்தில் எதிர் பாராதவிதமாக ஒரு துவாரம் ஏற்பட்டு, கப்பலுக்குள் தண்ணீர் வர ஆரம்பித்தது. வேகமாக தண்ணீரை அப்புறப்படுத்தி, அந்தத் துவாரத்தை அடைக்க முயற்சித்தார்கள். ஆனால் முடியவில்லை! தண்ணீர் அதிகமாக உள்ளே வர ஆரம்பித்தது. சில மணி நேரத்தில் கப்பல் மூழ்கிப் போகக் கூடிய ஒரு சூழ்நிலை! உதவிக்கு அழைப்பதற்கு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வேறு கப்பல்களும் தெரியவில்லை. அந்த ஆபத்தான நேரத்தில், என்ன செய்வதென்று தெரியாமல் எல்லோரும் பயந்தார்கள். ஆனால் அந்தக் கப்பல் மாலுமி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசமுள்ள ஒரு மனிதர், உடனே கப்பலில் இருந்த எல்லோரையும் கூடி வரச் செய்து, இந்த ஆபத்திலிருந்து இயேசு கிறிஸ்துவால் மட்டுமே நம்மை தப்புவிக்க முடியும், நாம் எல்லோரும் இணைந்து அவரிடத்தில் வேண்டுதல் செய்யலாம் என்று சொல்லி, சில நிமிட நேரங்கள் ஜெபித்து முடித்தார்கள்.

ஜெபித்து முடித்த பிறகு, அந்தக் கப்பலுக்குள் தண்ணீர் வருவது நின்று போயிற்று என்று சொல்லி, எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அந்த இடத்தில் தண்ணீர் நிரம்பி இருந்தபடியினால், தண்ணீர் வருவது எப்படி நின்று போனது என்பதை அவர்களால் பார்க்க முடியவில்லை. கரை சேர்ந்ததும் அந்தத் தண்ணீரை அப்புறப்படுத்திப் பார்த்தபோது, ஒரு மீன் அந்த துவாரத்திற்குள் நுழைந்து, அடைத்திருந்ததைப் பார்த்தார்கள். தேவனாகிய கர்த்தரைப் பாருங்கள்; ஆபத்திலிருந்த தம்முடைய பிள்ளைகளை தப்புவிப்பதற்காக, ஒரு மீனுக்கு கட்டளையிட்டார்! அந்த மீன் வந்து, அந்த துவாரத்திற்குள் நுழைந்து, அதை அடைத்தது. கர்த்தருடைய அந்த அற்புதமான செயலைக் கண்டு, அவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியப்பட்டு கர்த்தரை துதித்தார்கள். கர்த்தருடைய அந்த அற்புதச் செயலை நினைவு கூரும்படியாகத்தான், மீன் உருவத்தை Badge ஆக அணிந்திருப்பதாக அவர் கூறினார்.



தேவனாகிய கர்த்தர் எவ்வளவு அற்புதமானவர் பாருங்கள்! அன்றைக்கு யோனாவுக்காக ஒரு மீனுக்குக் கட்டளை கொடுத்தவர், எலியாவுக்காக ஒரு காகத்திற்குக் கட்டளை கொடுத்தவர், தானியேலுக்காக சிங்கங்களுக்கு கட்டளை கொடுத்தவர், உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்களையும் தப்புவிப்பார்! விசுவாசியுங்கள்! எந்தச் சூழ்நிலையிலும் என்னோடிருக்கிற என் இயேசு என்னைத் தப்புவிப்பார்! என்று விசுவாசியுங்கள்.

கர்த்தர் உங்களை தப்புவிக்க, அற்புதம் செய்ய வேண்டுமானால், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப்போல, தேவனாகிய கர்த்தரில் உறுதியாக இருங்கள். அன்றைக்கு அவர்களுக்கு ஒரு சோதனை, ஒரு நெருக்கம் வந்தபோது, அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகாமல், தேசத்தின் இராஜா நிறுத்திய பொற்சிலையை வணங்க மாட்டோம். தேவனாகிய கர்த்தரை தவிர, வேறு யாரையும் நாங்கள் வணங்க மாட்டோம் என்று உறுதியாக இருந்தபடியினால், இராஜா அவர்களை அக்கினிச் சூளையில் போட உத்தரவிட்டான். மரணம் வருகிற அந்த நேரத்திலும், அவர்கள் இராஜாவை நோக்கி, நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடையதேவர்களுக்கு (மனிதர்கள் கைகளினால் செய்த விக்கிரகங்களுக்கு) ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள் (தானியேல் 3:17,18). இப்படியாக அவர்கள் தேவனாகிய கர்த்தரில் உறுதியாக இருந்தபடியினால்தான், அவர்கள் அக்கினிச் சூளைக்குள் போடப்பட்டபோது, கர்த்தரே அந்த சூளைக்குள் இறங்கி வந்து, அவர்களைத் தப்புவித்து, உயிரோடு வெளிவரச் செய்தார்! நீங்களும் அவர்களைப்போல எந்த சூழ்நிலையிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் உறுதியாக இருங்கள். அவரை விட்டு விலகாமலும், முன் வைத்த காலை பின் வைக்காமலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே பற்றிக் கொள்ளுங்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் உங்களைத் தப்புவிக்கிறவராக இருப்பார்!

## காக்கும்படிக்கு...

நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் **காக்கும்படிக்கு** நான் உன்னுடனே இருக்கிறேன்... (எரேமியா 1:8) என்று தேவனாகிய கர்த்தர் சொல்கிறார்.

கர்த்தர் நம்மை இரட்சித்து, தப்புவிக்கிறவர் மட்டுமல்ல, நம்மைக் காத்துக் கொள்கிறவருமாகவும் இருக்கிறார்! எல்லா விதமான தீமைகளுக்கும் விலக்கி நம்மைக் காத்துக் கொள்ள, அவர் நம்மோடு கூடவே இருக்கிறார்! தேவனாகிய கர்த்தர் நம்மைப் பார்த்து, நீ யாரைக் குறித்தும் பயப்படாதே! உன்னைக் காத்துக் கொள்ளும்படியாக நான் உன்னோடு கூடவே இருக்கிறேன்! எந்த விதமான சூழ்நிலைகளைக் கண்டும் நீ பயப்படாதே! என்று சொல்கிறார். ஏனென்றால்,







இது கடைசிக் காலம்! இந்தக் கடைசிக் காலத்தில் ஆபத்துகள் வந்து கொண்டேதான் இருக்கும்!

பெரிய, பெரிய பூமி அதிர்ச்சிகள் வரும்! கொள்ளை நோய்களினால் பெரிய பாதிப்புகள் உண்டாகும்! கொடுமையான பஞ்சங்கள் வரும்! வெள்ளத்தினாலும், நெருப்பினாலும், காற்றினாலும் உண்டாகிற அனேக பாதிப்புகள் வரும்! இனி வருகிற காலத்தில், இயற்கை சூழ்நிலைகளினால் உண்டாகிற பாதிப்புகள் மிகத் தீவிரமாக இருக்கும்! தேசங்களை கலங்கப் பண்ணுகிற அனேகக் காரியங்கள் நடக்கும்! உங்கள் தேசத்தில், உங்கள் ஊரில், உங்கள் கிராமத்தில், உங்கள் பட்டணத்தில், இந்த உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் வரலாம்! ஆனால் தேவனாகிய கர்த்தர், உன்னைப் பாதுகாக்க நான் உன்னோடு கூட இருக்கிறேன்! ஆகவே, நீ பயப்படாதே! உன்னைச் சுற்றிலும் என்ன நடந்தாலும், அதைக் குறித்து நீ பயப்படவே கூடாது. உன்னை எப்படி பாதுகாக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். நான் உன்னோடு கூட இருக்கிறேன்! என்று சொல்கிறார்.

கடந்த 2001 ஜனவரி 26ம் தேதியன்று, குஜராத் மாநிலத்தை மையமாக வைத்து, இந்திய தேசத்தையே அசையப் பண்ணிய ஒரு பூமி அதிர்ச்சி வந்தது! அந்த மாநிலத்தில் அனேக பட்டணங்கள் பாதிக்கப்பட்டது! அந்த சமயத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் எதாவது உதவி செய்ய வேண்டும்! என்கிற நோக்கத்தில், மிஷனெரி சகோதரர் தேவதாஸ் அவர்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் என்னை கூட்டிக் கொண்டு போய் காண்பித்தார்கள். பாதிக்கப்பட்டிருந்த பல இடங்களை நான் பார்த்தபோது, என் மனம் உடைந்து போயிற்று! கட்டிடங்கள் எல்லாம் நொறுங்கி, குவியில் குவியலாகக் கிடந்தது! கிராமங்கள், பட்டணங்கள் சின்னா பின்னமாகிக் கிடந்தது! மக்கள் வீதிகளிலே பரிதாபமாக நின்று கொண்டு இருந்தார்கள்! கடற்கரை ஓரத்திலுள்ள, ''காந்திதாம்'' என்கிற பட்டணத்தில் ஒரு விசுவாசியின் வீட்டில்தான் நாங்கள் தங்கி இருந்தோம். நான் அவரிடத்தில் பூமி அதிர்ச்சி வந்தபோது எங்கே இருந்தீர்கள்? அந்த சூழ்நிலை எப்படி இருந்தது? என்று கேட்டேன். அப்போது அவர்கள், அன்று காலையிலே பரபரப்பாக நாங்கள் எங்களுடைய பணிகளை செய்து கொண்டிருக்கும்போது, திடீரென்று வீடு அசைய ஆரம்பித்தது! சட்டென்று, ஏதோ நடக்கிறது என்பதை நான் புரிந்து கொண்டு, நானும், மனைவி–பிள்ளைகளுமாக வேகமாக வீட்டை விட்டு வெளியே வந்து முற்றத்திலே நின்று கொண்டோம். எங்கள் கால்களுக்குக் கீழாக இருந்த பூமி, தட...தட என்கிற ஒரு பயங்கரமான சத்தத்தோடு, 2½ அடி உயரத்திற்கு அப்படியே உயர்ந்து வெடித்துப் பிளந்ததை நாங்கள் எங்கள் கண்களால் பார்த்தோம்! அப்பொழுது வீடுகள் நொறுங்கி கீழே விழுகிற சத்தத்தையும், ஜனங்களுடைய கூக்குரலையும் நாங்கள் கேட்டோம். அந்த சமயத்தில், நான் ஓடிப் போய் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டிருந்த மக்களை மீட்டு, மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க கர்த்தர் எனக்கு கிருபை கொடுத்தார் என்று சொன்னார்.







உடனே நான் அவரிடத்தில், சரி, இவ்வளவு சொல்கிறீர்களே! நீங்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டீர்கள்? என்று கேட்டபோது, எங்கள் வீட்டைச் சுற்றிலும் இருக்கிற எல்லா வீடுகளுமே பூமி அதிர்ச்சியில் பாதிக்கப்பட்டு விட்டது. கோடிக்கணக்கான மதிப்புடைய பெரிய பெரிய பங்களாக்களில் விரிசல் விழுந்து, எந்த நேரத்திலும் விழுந்து நொறுங்கி விடக் கூடிய நிலைமையில்தான் இருந்தது! யாருமே தங்கள் வீட்டுக்குள் போய் தங்க முடியாத நிலைமையில், வீட்டுக்கு வெளியே கூடாரம் போட்டுத்தான் தங்கி இருந்தார்கள். ஆனால், இந்த ஏரியாவிலேயே நாங்கள் ஒரு குடும்பத்தினர் மட்டும்தான் வீட்டுக்குள் தங்கி இருக்கிறோம்! எங்கள் வீட்டில் இருக்கிற ஒவ்வொரு சுவரையும் நான் உற்றுப் பார்த்தேன். ஆனால், ஒரு சின்னக் கீறல் கூட விழவில்லை! என்று மிகுந்த ஆச்சரியத்தோடு சொல்லி, ஒவ்வொரு அறையாக எனக்கும் காண்பித்தார்.

ஒரு பெரிய பூமி அதிர்ச்சி வந்தது! சுற்றிலும் இருக்கிற மற்ற வீடுகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, நொறுங்கி விழுந்து போயிருக்கிற சூழ்நிலையில், அவருடைய வீடு மட்டும் எந்த விதமான பாதிப்பும் இல்லாமல், எப்படி பாதுகாக்கப்பட்டது? அதுதான் கர்த்தருடைய பாதுகாப்பு! காரணம், அவர்கள் தேவனாகிய கர்த்தருடைய பிள்ளைகளாக இருந்தார்கள்! அவர்கள் அவரோடு கூடிய தங்களுடைய ஐக்கியத்தை சரியாக வைத் திருந்தபடியினால், அவர் கொடுத்த பாதுகாப்பு!

தேவனாகிய கர்த்தர் உங்களைப் பார்த்து, உன்னைச் சுற்றிலும் எவ்வளவோ தீங்குகள் நடக்கலாம்! கொள்ளை நோய்கள் வரலாம்! பஞ்சம் வரலாம்! பூமி அதிர்ச்சிகள் வரலாம்! இயற்கையின் சீற்றத் தினால் பாதிப்புகள் வரலாம்! இப்படியாக என்ன தீங்கு வேண்டுமானாலும் சம்பவிக்கலாம்! ஆனால், உன்னைப் பாதுகாக்க நான் இருக்கிறேன்! எந்த சூழ்நிலையிலும் உன்னை எப்படிப் பாதுகாக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும்! ஆகவே, நீ பயப்படாதே! என்று சொல்கிறார். தேவனாகிய கர்த்தர் எல்லா விதமான தீங்குக்கும் விலக்கி, உங்களைத் தப்புவிக்க வேண்டுமானால், நீங்கள் எப்போதும் அவரோடே கூட இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்!

''நீ பயப்படாதே! நான் உன்னோடு இருக்கிறேன்!'' என்று தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்! ஒருபக்கம் பாவத்திற்கும், மறுபக்கம் இயேசு கிறிஸ்துவுக்குமாக நீங்கள் இடம் கொடுக்க முடியாது. உங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால்தான், அவர் உங்களோடு கூட இருப்பார்.

***அன்பான வாலிபர்களே! இதுவரை நீங்கள் எப்படி இருந்தாலும் சரி, இன்றைக்கு நீங்கள் ஒரு தீர்மானம் எடுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு வாழ உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களோடு கூட இருப்பார். பயப்படாதீர்கள்!*** ●

# அக்கினியைப் பரவ செய்வோர் முகாம்

REVIVAL iGNITERS

"இயேசு விடுவிக்கிறார்" ஊழியத்திற்கு ஆண்டவர் கொடுத்த தரிசனத்தின்படி வாலிபர்களுக்கு அக்கினியை பரவச் செய்வோர் முகாம் நடத்தி அதன் மூலம் அநேக தேசங்கள். மாநிலங்களுக்கு எழுப்புதல் அக்கினியை எடுத்து செல்லும் வாலிபர்களாக உருவாக்கி அனுப்ப சொன்ன வாக்கின்படியே 2021ஆம் ஆண்டு வாலிபர்களுக்கென்று 5 முகாம்கள் நடத்தி பயிற்றுவிக்கப்பட்டு அனுப்பியுள்ளோம்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 முதல் 16 வரை தமிழ் நாட்டிலிருந்து வந்த வாலிபர்களுக்கு நடத்தப்பட்ட அக்கினியைப் பரவ செய்வோர் முகாமில் 1,692 பேரும், ஜனவரி 25 முதல் 27 வரை நடத்தப்பட்ட முகாமில் 1,402 பேரும் கலந்து கொண்டு எழுப்புதல் அக்கினியை சுமந்து சென்றனர். 7 விதமான யௌவன சந்ததியை எழுப்புவேன் என்று வாக்கின்படியே கர்த்தர் யௌவன சந்ததியை எழுப்பிக் கொடுத்து வருகிறார்.



செய்தி: மோகன் சி. லாசரஸ்

# Spread the Revival Fire






மார்ச் மாதம் கிழக்கிந்திய மாநிலங்களான ஒரிஸ்ஸா, ஜார்கண்ட், பீஹார், சத்தீஷ்கர், மேற்கு வங்காளம் மற்றும் உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து சுமார் 961 வாலிபர்களுக்கு எழுப்புதல் அக்கினியைப் பரவச் செய்வோர் முகாம் நடத்தப்பட்டது.








செப்டம்பர் மாதம் 14 முதல் 17 வரை 3 நாட்கள் டெல்லி, மத்தியபிரதேசம், பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான், உத்திரபிரதேசம், ஹரியானா மாநிலங்களிலிருந்து வந்த 998 வாலிபர்களுக்கு எழுப்புதல் அக்கினி பரவச் செய்வோர் முகாம் நடத்தப்பட்டது.

# Spread the Revival Fire



நவம்பர் மாதம் 2 முதல் 4 வரை கர்நாடக மாநிலத்திலிருந்து 1300 வாலிபர்கள் வரவழைக்கப்பட்டு எழுப்புதல் அக்கினியை பற்ற வைத்து அனுப்பப்பட்டது.



இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து இதுவரைக்கும் 6,353 வாலிபர்கள் வரவழைக்கப்பட்டு எழுப்புதல் அக்கினி பரவச் செய்வோர் பயிற்சி முகாம் கொடுத்து பல மாநிலங்களிலிருந்து எழுப்புதலுக்காக ஜெபிக்கும் சேனையை எழுப்ப தேவன் கிருபை செய்தார்.







# பள்ளிக் கல்லூரிக் கூடுகை!

ஊரடங்கு நாட்களில் பள்ளிக் கல்லூரிகள் மூடப்பட்ட நிலையிலும், செப்டம்பர் மாதம் பள்ளிகள் திறந்த போது, அநேக பள்ளிக் கல்லூரிகளில் சென்று மாணவர்களை ஊக்கப்படுத்தி, சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். படிப்பைக் குறித்து எண்ணமே இல்லாமல், சோர்ந்து போய் இருந்த மாணவ, மாணவியருக்கு சுவிசேஷம் அறிவித்ததோடு, பாடத்தைக் குறித்த பயம், எதிர்காலத்தைக் குறித்த அச்சம் போன்ற பல மன குழப்பத்தில் இருந்த மாணவர்களை உற்சாகப்படுத்தி, அவர்கள் மனதில் இருந்த தவறான எண்ணங்களை மாற்றி அவர்களுக்குள் தன்னம்பிக்கையைக் கொடுத்து, ஊக்கப்படுத்தி ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். மன சோர்வோடும், மன அழுத்தத்தோடும் இருந்த அநேக மாணவர்கள் குழப்பங்கள் மாறி விடுதலைப் பெற்றுக் கொண்டனர். செப்டம்பர் முதல் டிசம்பர் வரை சுமார் 3,296 மாணவ மாணவியர்களை சந்தித்து ஆலோசனை வழங்க தேவன் கிருபை பாராட்டினார்.










# REVIVAL iGNITERS









வாலிபர் ஊழியத்தின் மூலமாக சினெர்ஜியா மாதாந்திர வாலிபர் கூடுகை நடைபெற்று வந்தது. இந்த வருடம் முதல் Igniters மாதாந்திர வாலிபர் கூடுகையாக பெயர் மாற்றப்பட்டு ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில் என 43 இடங்களில் வாரந்தோறும் நடைபெற்று வருகிறது. ஊரடங்கு நாட்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் Zoom மூலமாக சுமார் 2,000க்கும் அதிகமான வாலிபர்கள் இணைக்கப்பட்டு ஐக்கியத்தை பெலப்படுத்தி ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி பெற்று வருகிறார்கள். ஒருசில இடங்களில் நேரடியாக சென்று ஐக்கியத்தை பெலப்படுத்தவும் தேவன் கிருபை செய்து வருகிறார். மாதந்தோறும் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் வந்து தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலனடைந்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக் கிழமை சமூக வலைத்தளங்கள் மூலமாக Igniters கூடுகை நடைபெறுவதில் சுமார் 3,000க்கும் அதிகமான பேர் பார்த்து பயனடைகிறார்கள்.








## மாதாந்திரக் கூடுகை!



# நன்றி ஜெபம்

●கடந்த 2021ஆம் ஆண்டு முழுவதும் நம்மையும் நம் குடும்பத்தையும் பாதுகாத்த தேவனுக்கு நன்றிகளை செலுத்தி ஜெபிப்போம்.

●கடந்த ஆண்டில் பயங்கரமான கொள்ளை நோய்கள் வந்த போதும், எல்லாத் தீங்கிற்கும் விலக்கி பாதுகாத்த தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபிப்போம்.

●அநேகர் வேலைகளை இழந்த போதிலும், கர்த்தர் போஷித்து வழிநடத்தின அவருடைய கிருபையை எண்ணி நன்றி செலுத்தி ஜெபிப்போம்.

●பள்ளிக் கல்லூரிகள் மூடப்பட்ட சூழ்நிலையிலும் நம் பிள்ளைகளை கர்த்தர் எந்த குறைவுமின்றி பிள்ளைகளுக்கு வேண்டிய ஞானம், கிருபை கொடுத்து, நடத்திய தேவனை நன்றி செலுத்தி ஜெபிப்போம்.

●தொழில், வியாபாரம் மற்றும் ஊழியம் செய்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து உயர்த்தினதை நினைத்து நன்றி செலுத்தி ஜெபிப்போம்.

●புதிய வருடத்தைக் காண செய்த தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபிப்போம்.

# விண்ணப்ப ஜெபம்



● புதிய வருடத்தை காண செய்த தேவன், நல்ல சுகம், பெலன், ஆரோக்கியம் கொடுக்க ஜெபிப்போம்.

● படிக்கிற பிள்ளைகளுக்கு கர்த்தர் நல்ல ஞானத்தையும், விவேகத்தையும் கொடுக்க ஜெபிப்போம்.

● படிக்கிற இடத்தில் மற்றும் வேலை ஸ்தலத்தில் பெண் பிள்ளைகளுக்கு நல்ல பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.

● இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்கள் தவறான பாவக் காரியங்களில் சிக்கிக் கொள்ளாதபடி தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.

● படிப்பில் கவனம் செலுத்த முடியாமல், மன அழுத்தத்திற்குள் இருக்கும் ஒவ்வொரு பிள்ளைகளும் அதிலிருந்து வெளிவரவும், படிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகவும் ஜெபிப்போம்.

● குடும்ப சூழ்நிலை, வியாதி போன்ற காரணங்களால் படிக்க முடியாமல் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் சூழ்நிலைகளை மாற்றிக் கொடுக்கும்படி ஜெபிப்போம்.

## மன்றாட்டு ஜெபம்




• மதுபானத்திற்கு அடிமையாகி வியாதிபட்டு மரிக்கிறார்கள். மதுபானத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் விழிப்புணர்வு உண்டாக ஜெபிப்போம்.

• குடி, வெறியின் ஆவிகள் நம் தேசத்தை விட்டு வெளியேறவும், மதுபானம் இல்லாத தேசமாக மாறவும் ஜெபிப்போம்.

• டாஸ்மாக் கடைகள் மற்றும் மதுபான ஆலைகள் மூடப்பட மன்றாடி ஜெபிப்போம்.

• பட்டினி சாவுகள் குறைக்கப்படவும், குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச்சத்து உணவுகள் கிடைக்கப் பெறவும் ஜெபிப்போம்.

• வேலை வாய்ப்புகளை இழந்து தவிக்கும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

• மீனவர்கள், விவசாயிகளின் வாழ்வாதாரங்கள் உயர்த்தப்படவும், அரசாங்கம் நல்ல திட்டங்களை கொண்டு வரவும் மன்றாடி ஜெபிப்போம்.

## போராட்ட ஜெபம்

• கொரோனா வைரஸ் நம் தேசத்திற்குள் வராதபடி முற்றிலும் அழியும்படி போராடி ஜெபிப்போம்.

• தேசத்திற்குள் தீவிரவாதம், இயற்கையின் சீற்றம், கொள்ளை நோய்கள் தாக்காதபடி போராடி ஜெபிப்போம்.

• எந்த விதமான பாதிப்புகளோ, அழிவுகளோ நம் தேசத்தில் உருவாகாதபடி போராடி ஜெபிப்போம்.

• எல்லா தேசங்களிலும் தேவ ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாக ஜெபிப்போம்.

• தேசத்திற்கு வரவிருக்கும் அழிவுகள் தடுக்கப் படவும், எல்லா தேச மக்களும் அழிவிலிருந்து விடுவிக்கப்படவும் ஜெபிப்போம்.

• தேசத்தின் பாதுகாப்பை, தேசத்தின் சமாதானத்தைக் கெடுக்க எத்தனிக்கும் பொல்லாத சாத்தானின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.




# ZOOM

## இரவு ஜெபம்

நம் தேசத்தில் கொரோனா கொள்ளை நோயினால் ஏராளமான ஜனங்கள் அழிந்து கொண்டிருக்கும் போது, ஜனங்கள் அழியாத படிக்கும், கொள்ளை நோய் நம் தேசத்தை விட்டு நீங்கும்படிக்கும், கடந்த மே மாதம் இரவு ஜெபம் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை தேசத்தின் பல பகுதியிலிருந்தும் Zoom App வாயிலாக சுமார் 200 வாலிபர்கள் இணைந்து, அழிந்துக் கொண்டிருக்கிற ஜனங்களுக்காக ஜெபித்து வருகிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

வாலிபர்கள் ஊரடங்கு நாட்களில் ஜெப ஜீவியத்திலும், பரிசுத்தத்தை காத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் ஒவ்வொரு நாளும் Zoom மூலமாக பல நிகழ்ச்சிகளை வழங்க தேவன் கிருபை செய்தார்.












## இளம் வாலிபர் கூடுகை

இளம் வயதில் உண்டாகும் சோதனைகளைத் தாண்டி வெற்றியுள்ள இளம் வாலிபனாக வாலிபர்கள் திகழ வேண்டும் என்பதற்காக, ''சோதனைகளை மேற்கொள்வது எப்படி?'', ''உண்மையை தெரிஞ்சுக்கோ'' போன்ற தலைப்பில் புதன் கிழமைகளில் Zoom App வாயிலாக இளம் வாலிபர்களுக்கென்று சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 300க்கும் மேற்பட்ட இளம் வாலிபர்கள் பங்குபெற்று, தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டு, பரிசுத்தமாய் வாழ தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணித்தனர்.





## தேர்தலுக்கான ஜெபம்

கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலுக்காக அநேக ஜெபங்கள் தமிழ்நாடு முழுவதும் செய்யப்பட்டாலும், வாலிபர்களை ஜெபத்தில் உற்சாகப்படுத்தும்படி 21 நாட்கள் தொடர்ந்து தமிழ்நாட்டின் தேர்தலுக்காக Zoom App வாயிலாக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. இதில் ஒவ்வொரு நாளும் 150க்கும் மேற்பட்ட வாலிபர்கள் கலந்து கொண்டு தமிழ்நாட்டின் சட்டமன்ற தேர்தலுக்காக உற்சாகமாய் ஜெபிக்க தேவன் கிருபை செய்தார்.








## Youth Revival Conference

இந்தியாவின் எழுப்புதலில் வாலிபர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதால் அவர்களுக்காக கடந்த ஜீன் மாதங்களில் ''வாலிபர் எழுப்புதல் கருத்தரங்கு'' ஒவ்வொரு புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் Zoom App-ல் நடத்தப்பட்டது. இந்தக் கருத்தரங்கில் வரப்போகிற 7 விதமான எழுப்புதலைக் குறித்த காரியங்கள் வாலிபர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. சுமார் 450க்கும் மேற்பட்ட வாலிபர்கள் இக்கூடுகையில் கலந்து கொண்டு எழுப்புதலைக் குறித்த தரிசனத்தையும் பாரத்தையும் பெற்றுக் கொண்டனர். அநேக வாலிபர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கவும், எழுப்புதலுக்காக ஜெபிப்போம் என்று தீர்மானம் எடுத்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.









# வாலிபர் கூடுகை நேரலை நிகழ்ச்சி (மவுன்ட் சினாய் - வாலிபர் கொண்டாட்டம்)

## Mount Sinai

வாலிபர்களை ஜெபிக்கும் ஜெப வீரர்களாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் ''Mount Sinai'' என்ற தலைப்பில் வாலிபர் உபவாசக் கூடுகை வாலிபர் ஊழியத்தின் மூலமாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான




வாலிபர்கள் இக்கூடுகையில் பங்கு பெற்று தேசத்திற்காக ஜெபம் செய்வார்கள். ஆனால் இந்த ஆண்டு ஊரடங்கின் காரணமாக Mount Sinai உபவாச ஜெபம் தடையில்லாமல் சமூக வலைதளங்களில் நடத்த கர்த்தர் உதவி செய்தார். இந்த நேரலை உபவாச ஜெபத்தில் 3300க்கும் மேற்பட்ட வாலிபர்கள் கலந்து கொண்டு இந்திய தேசத்திற்காகவும், ஜனங்களின் இரட்சிப்பிற்காகவும் திறப்பின் வாசலில் நின்று ஜெபித்தார்கள். சகோதரர் சாம் ஜெபராஜ் மற்றும் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் தேவ செய்தி அளித்து வாலிபர்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தார்கள்.



## வாலிபர் கொண்டாட்டம்

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15ம் தேதி வாலிபர்களுக்காக ''வாலிபர் கொண்டாட்டம்'' என்ற தலைப்பில் நாலுமாவடியில் வாலிபர் கூட்டம் நடைபெறும். இக்கூடுகையில் ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் பங்கு பெற்று பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று செல்வார்கள். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி இக்கூடுகை 'இயேசு விடுவிக்கிறார்' சமூக வலைத்தளங்களில் நேரலையில் நடத்தப்பட்டது. இந்தியா முழுவதிலிருந்தும் சுமார் 10,000க்கும் மேற்பட்ட வாலிபர்கள் இந்த நேரலை நிகழ்ச்சியில் பங்குபெற்று தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டனர். சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துக் கொண்டு, வாலிபர்கள் பாவ வாழ்க்கையிலிருந்து விடுபட ஜெபம் செய்தார்கள்.



## பின்தொடர் ஊழியங்கள் (Igniters)






### எழுப்புதலை பரவச் செய்வோர் முகாம்

இந்தியாவின் எழுப்புதலுக்கு 7 விதமான யௌவன சந்ததியை எழும்ப வேண்டும் என்ற தேவ திட்டத்தின்படி கடந்த ஆண்டு நாலுமாவடியில் வாலிபர்களுக்காக ''எழுப்புதலை பரவச் செய்வோர் முகாம்'' Igniters என்ற தலைப்பில் வாலிபர்களுக்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாமில் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வாலிபர்கள் வரவழைக்கப்பட்டு எழுப்புதலைக் குறித்த தரிசனத்தையும், எழுப்புதலில் தேவன் வாலிபர்களை எப்படி பயன்படுத்துவார்? என்ற பாரத்தையும் சகோதரர் மோகன் சி. லாசரஸ் மற்றும் சகோதரர் வின்சென்ட் செல்வக்குமார் ஆகியோர் தேவ வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டு வாலிபர்களை உற்சாகப்படுத்தி ஜெபங்களை ஏறெடுத்தார்கள்.








இம்முகாமில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்ற வாலிபர்கள் தங்களுடைய பட்டணங்கள் மற்றும் கிராமங்களுக்கு சென்று தேவனை அறியாத ஜனங்கள் மத்தியில் நேரடியாகவும், கைப்பிரதிகள் மூலமாகவும் கடந்த ஆண்டில் 1,27,474 பேருக்கு இயேசுவின் அன்பை அறிவித்து உள்ளனர். இதுமட்டுமின்றி பட்டணங்கள் மற்றும் கிராமங்கள் தோறும் ஜெபநடை செய்து சுமார் 2,05,315 மணி நேரங்கள் தேசத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும்ஜெபங்களைஏறெடுத்துள்ளனர். மேலும் கடந்த டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் நாட்களில் இருளில் இருக்கும் ஏராளமான ஜனங்களுக்கு இனிப்புகள் வழங்கி கைப்பிரதிகள் கொடுத்தும், ஏழை-எளிய ஜனங்களுக்கு உதவிகள் செய்தும் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தினார்கள். இவர்கள் ஜெபம் மற்றும் சுவிசேஷம் அறிவிப்பது மட்டுமின்றி சமுதாயப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்தி இயேசுவின் அன்பை ஜனங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். நாலுமாவடி அருகிலுள்ள குரும்பூர் பகுதியில் சுமார் 100க்கும் மேற்பட்ட Igniter's வாய்க்கால் தூய்மை பணியில் ஈடுபட்டனர். மேலும் சென்னையில் பெய்த பெரும் மழையால் ஏராளமான ஜனங்கள் பாதிக்கப்பட்டனர். NLS மற்றும் நல்ல சமாரியன் கிளப்புடன் சேர்ந்து ஏழை-எளிய ஜனங்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் பெட்ஷீட் கொடுக்க தங்களின் கரங்களை இணைத்தனர். மேலும் திண்டுக்கல் மாவட்டத்தில் NLS மூலமாக 75,000 மரங்கள் மற்றும் 15,000 பனை விதைகள் வழங்கி தங்களை சமுதாயப் பணியில் ஈடுபடுத்தி கொண்டனர்.

# கிராம ஊழியம்!



கிராமங்கள் தோறும் சுவிசேஷ நற்செய்தியை அறிவிக்க தேவன் பாரப்படுத்தியதால், அக்கினியை பரவச் செய்வோர் முகாமில் கலந்து கொண்ட வாலிபர்களைக் கொண்டு கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஜூலை மாதம் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் தாலுகாவை மையமாக வைத்து 89 கிராமங்களுக்கு 70 Igniters கிராமங்கள் தோறும் சென்று, 7,398 ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார்கள்.













ஆகஸ்ட் மாதம் தென்காசி மாவட்டம் கடையம் தாலுகாவை மையமாக வைத்து 47 கிராமங்களுக்கு 53 Igniters, 3,460 ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், கைப்பிரதிகள் மற்றும் பத்திரிகைகள் மூலமாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவினார். இந்தக் கொரோனா நாட்களில் கிராம ஊழியத்தின் மூலம், தேவனை அறியாத அநேக மக்களுக்கு கர்த்தருடைய அன்பை பகிர்ந்து கொள்ளவும், வருத்தத்தோடும், பாரத்தோடுமுள்ள ஜனங்களுக்கு ஆறுதலான வார்த்தையை சொல்லி ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார்.










# செய்திகள்!

### கடந்த நிதியாண்டில் மட்டும் கணக்கீட்டு ரீதியாக

## வசூலிக்க முடியாத வங்கிக்கடன் ரூ 2.02 லட்சம் கோடி தள்ளுபடி

கடந்த நிதியாண்டில் மட்டும் வங்கிகள் வசூலிக்க முடியாத ரூ.2.02 லட்சம் கோடி கடனை, கணக்கீட்டு ரீதியாக தள்ளி வைத்துள்ளன. இதுபோல, கடந்த 7 ஆண்டுகளில் மொத்தம் ரூ 10.7 லட்சம் கோடி கணக்கீட்டு ரீதியாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

வராக்கடன் பிரச்சனையால் பல வங்கிகளின் நிதிநிலை பாடுமோசமாகி வருகிறது. வராக்கடன் பிரச்சனையால் அதிகமாக பாதிக்கப்பட்டவை பொதுத்துறை வங்கிகள்தான். காரணம், பெரும்பாலான வங்கிக்கடன்கள் வசூலிக்க முடியாமல், அவற்றை கணக்கீட்டு ரீதியாக தள்ளுபடி செய்கின்றன.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் ரூ11.68.095 கோடி வராக்கடன்கள் இதுபோல் கணக்கீட்டு ரீதியாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக, தகவல் அறியும் உரிமை சட்டடத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு ரிசர்வ் வங்கி விளக்கம் அளித்துள்ளது. இதில் ஒன்றிய அரசு பதவியேற்ற பிறகு 2014-15 நிதியாண்டில் இருந்து கடந்த நிதியாண்டு வரை 7 ஆண்டுகளில் மொத்தம் ரூ10.72 லட்சம் கோடி கணக்கீட்டு ரீதியாக தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

பொதுவாக தொடர்ந்து மூன்று காலாண்டுகளாக வசூலிக்க முடியாத வராக்கடன்கள், வங்கி நிதி நிலையை சீராக்க கணக்கீட்டு ரீதியாக தள்ளுபடி செய்யப்படுகின்றன. அதே நேரத்தில், யாருடைய கடன்கள் இதுபோல் கணக்கீட்டு ரீதியாக தள்ளுபடி செய்யப்பட்டன என வங்கிகள் பெரும்பாலும் அறிவிப்பதில்லை.

கடந்த, 2014-15 நிதியாண்டில் ரூ58.786 கோடி, 2015-16 நிதியாண்டில் ரூ70.413 கோடி, 2016-17 நிதியாண்டில் ரூ1,08,373 கோடி, 2017-18 நிதியாண்டில் ரூ1,61,328 கோடி, 2018-19 நிதியாண்டில் ரூ2,36,265 கோடி 2019-20 நிதியாண்டில் ரூ2,34,170 கோடி கணக்கீட்டு ரீதியாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதற்கு முன்பு 2011-12 நிதியாண்டில் ரூ20.752 கோடி, 2012-13 நிதியாண்டில் ரூ32.992 கோடி, 2013-14 நிதியாண்டில் ரூ42.235 கோடியை வங்கிகள் கணக்கீட்டு ரீதியாக தள்ளுபடி செய்துள்ளன. கடைசியாக, கடந்த நிதியாண்டில் மட்டும் ரூ2,02,781 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கணக்கீட்டு ரீதியாக இவை தள்ளுபடி செய்யப்பட்டாலும், இவை கடன் தள்ளி வைப்பு போன்றது தான். எனவே, இவற்றை வசூலிக்கும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என வங்கி மற்றும் ஒன்றிய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

| நிதி ஆண்டு | கடன் தள்ளுபடி (கணக்கீட்டு ரீதியாக) |
|---|---|
| 2014-15 | ரூ58.786 கோடி |
| 2015-16 | ரூ70.413 கோடி |
| 2016-17 | ரூ 108373 கோடி |
| 2017-18 | ரூ1,61,328 கோடி |
| 2018-19 | ரூ2,36,265 கோடி |
| 2019-20 | ரூ2,34,170 கோடி |
| 2020-21 | ரூ2,02,781 கோடி |

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakshmipuram, Nalumavadi - 628 211

புதிர்: ரேச்சல்

# வேதாகம

## புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களில் வேதத்தில் உள்ள ஒருசில நபர்களின் பெயர்கள் மறைந்திருக்கிறது. மறைந்திருக்கும் நபர்கள் யார் என்று கண்டுபிடித்து எங்களுக்கு எழுதி அனுப்பவும்.



























பதில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்

**15.01.2022**

கடந்த மாத விடைகள்

1. பேதுரு (அப். 5:19). 2. பிலிப்பு (அப். 8:26)
3 ஏரோது (அப். 12:23). 4. கொர்நெலியு (அப். 10:3)
5. பவுல் (அப். 27:23). 6 கழுதை (எண். 22:23)
7. யோசுவா (சகரியா 3:3). 8 சகரியா (லூக்கா 1:11)
9. இயேசு (லூக்கா 22:43). 10 சாத்தான் (2 கொரி. 11:14)




JESUS REDEEMS YOUTH MINISTRIES,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

வெற்றிபெறும் ஒரு நபருக்கு Ear phone பரிசு வழங்கப்படும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-12-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

# புத்தாண்டு தீர்மானங்கள்...

ஒவ்வொரு புத்தாண்டிலும் நாம் பல தீர்மானங்களை எடுக்கிறோம். இனிமேல் கோபப்படமாட்டேன், பெற்றோருக்குக் கீழ்ப்படிவேன், மது அருந்தமாட்டேன் போன்ற பழக்கங்களை கைவிட வேண்டும் மற்றும் உடல் எடை குறைக்க வேண்டும் என்று பல தீர்மானங்களை எடுத்து அதை நிறைவேற்ற முடியாமல் இருந்திருக்கலாம். ஆகையால் இந்த வருடம் தீர்மானம் ஏதும் எடுக்கக் கூடாது என்று நினைக்காமல், உங்களால் செய்ய முடிகிறதான சிறுசிறு தீர்மானங்களை எடுத்து முயற்சி செய்து பாருங்களேன்.

**''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலி. 4:13)** என்ற பவுலின் வார்த்தைகளை நாமும் இந்த புத்தாண்டில் உரிமையாக்கிக் கொண்டு, எடுத்த தீர்மானங்களை நிறைவேற்ற உற்சாகப்படுத்துகிறேன்.

## முறைப்படுத்துங்கள்



தினந்தோறும் பயன்படுத்தும் பொருட்களை ஒழுங்குப்படுத்தவும். நீங்கள் படிக்கும் புத்தகங்கள், உங்கள் ஆடைகள் மற்றும் படுக்கை விரிப்புகளை தினமும் காலையில் நன்றாக மடித்து வைக்க முயற்சி செய்யுங்கள்.

## அன்றையப் பணிகளை நிறைவேற்றுங்கள்



நீண்ட நாட்களாக செய்யாமல் வைத்திருக்கும் பணிகளை முடிக்க முயற்சி செய்யுங்கள். தினமும் காலையில் எழுந்தவுடன் திட்டமிட்டு அன்றைய தினம் திட்டமிடும் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுங்கள்.

## பட்ஜெட்




ஒவ்வொரு மாதமும் அந்த மாதத்திற்கான தேவைகளை பட்ஜெட் போட்டு அதன்படி செயல்படுங்கள்.

தேவையில்லாத வீண் செலவுகளை தவிர்த்திடுங்கள். அடிக்கடி மொபைல் போனை மாற்றுவது, அளவுக்கு அதிகமான ஆடைகளை வாங்கி குவிப்பது போன்ற அநாவசியமான தேவைகளை தவிர்க்கவும்.

## உடல் ஆரோக்கியம்



அடிக்கடி வெளியில் சாப்பிடுவதால் உடல் ஆரோக்கியம் சீராக இருக்காது. இதனால் பலவிதமான நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. எனவே ஆரோக்கியமான உணவுகளை வீட்டில் சமைத்து சாப்பிடுங்கள்.

## இலக்கு



★ இந்த வருடம் நான் படிக்கும் படிப்பில் நல்ல வெற்றி பெற வேண்டும் என்று இலக்கோடு படியுங்கள்.

★ வேலை ஸ்தலத்தில் புதிய இலக்குகளை அடைய முயற்சி செய்யுங்கள்.

★ இந்த வருடம் தினமும் காலை மாலை ஜெபித்து வேதம் வாசிப்பேன் என்ற இலக்குடன் செயல்படுங்கள்.

★ இந்த வருடத்திற்குள் ஒருமுறையாவது முழு வேதாகமத்தை படிக்க வேண்டுமென்று தீர்மானியுங்கள்.

## சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்

மாதத்திற்கு ஒருமுறை அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறையாவது சுற்றுப்புறத்தையும் உங்கள் வீட்டையும் சுத்தமாக வைக்க முயற்சியுங்கள். தினமும் நன்றாக துவைத்து காயவைத்து ஆடைகளை அணியுங்கள்.

*ஆதாரம்: இணையதளம்*